**பேருவளை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய மீண்டெழும் மானியம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 255,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 1,391,581 தொகை குறைவான காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iii) | டெக்டர் தவணைக்காக மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணங்களில் குறைக்கப்பட்ட தொகை ரூபா 1,368,750 ஆக இருந்த போதும், பெற வேண்டிய முத்திரைக் கட்டண கணக்கில் ரூபா 1,053,937 தொகை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரமே சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 314,813 இனால் பெறவேண்டிய முத்திரைக் கட்டண கணக்கு, மாகாணசபை கடன் கணக்கு மற்றும் அறவிட முடியுமான பயன்பாட்டு சேவைகள் கணக்கு என்பன அதிகரித்தும், மூலதன செலவினங்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | இருப்புப் பெறுமதியான பௌதீக இருப்பு கணக்கு வைப்பதற்கு பதிலாக ரூபா 3,941,016 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிக்கு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி சமமாக இருக்க வேண்டிய போதிலும், அந்த இரண்டு கணக்குகளுக்குமிடையே ரூபா 451,702 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | 2015 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 309,000 தொகையான இரண்டு டேலர்களின் பெறுமதி மற்றும் கை உழவு இயந்திரத்தின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 57,163,616 மீதிக்கும், அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 9,247,483 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கஞ் செய்யப்பட்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் இல் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 444,419 தொகையான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்குகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்காண்டின் போது தொங்கல் கணக்குகள் சரிசெய்யப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் என்பன இன்மையினால் ரூபா 74,376,389 தொகையான 09 கணக்கு விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதி படி முறையாக சொத்துக்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிவப்பு அறிவித்தல் விநியோகித்து ஆதனங்களை தடைசெய்வதற்கான ஏற்பாடுகள் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1,087,611 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணத் தொகை உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(1)(2) | 1,669,388 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலவதியான சகல வைப்புக்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலாவதியான வைப்புக்களை எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,233,072 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,574,806 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 16,336,400 | 16,908,314 | 10,531,001 | 19,668,035 | 17,297,400 | 16,784,174 | 8,565,171 | 18,526,775 |
| (ii) | வாடகை | 19,870,600 | 11,149,153 | 8,971,404 | 2,177,749 | 19,973,000 | 13,031,737 | 11,443,624 | 1,588,112 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 510,000 | 216,755 | 216,755 | - | 160,000 | 192,750 | 170,000 | 22,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 210,000 | 125,875 | 125,875 | - | 135,000 | 485,812 | 485,812 | - |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 ஆந் திகதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 18,372,695 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 13,290,721 தொகை அதாவது 72 சதவீதம் அறவிடப்படவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை ஆதனவரி வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வருடாந்த சிட்டையிடல் ரூபா 15,262,394 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 6,299,414 தொகை அதாவது 41 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் மொத்த ஆதனவரி நிலுவை ரூபா 16,454,579 ஆகும். | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஆண்டின் போது அமுல்படுத்தப் படுகின்ற திட்டத்தின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை 01 வருடத்திற்கு குறைவான நிலுவை ரூபா 2,823,702 தொகையும், 01 - 03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 4,103,787 தொகையும், 03 - 05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 7,483,962 தொகையும், 05 - 10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 3,903,792 | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடைசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 1,274,892 தொகையும் ஆக இருந்தன. இவ்வாறு நீண்ட காலம் ஆதனவரி செலுத்தாத ஆதனங்கள் தொடர்பாக நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | அரச நிறுவனங்களின் 39 அலகுகளுக்குரிய 2018 திசெம்பர் 31 வரையில் 03 வருடங்களை விஞ்சிய நிலுவை மீதி ரூபா 206,490 ஆகும். | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளருக்கு தேவையான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | சபையில் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் ஆதனங்களுக்காக புதிய மதிப்பீட்டுப் பெறுமதியொன்றைப் பெற்று ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் செய்யப்படுகின்ற புதிய மதிப்பீடு மீள் திருத்தத்தின் போது அந்த ஆதனங்களுக்காக புதிய மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 04 விடயங்களுக்காக மாத்திரமே உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | 14 உப விதிகள் 2016 திசெம்பர் 28 ஆந் திகதி மாகாண சபை அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| | | |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்து அளவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 114.57 மில்லியன் கிரயமான 110 பணிகளை நிறைவேற்றுவதற்கு இனங்காணப்பட்ட செயல்முன்னேற்றத்தை அளவிடும் திட்டமுறைமையொன்று சபையிடம் காணப்படவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை அளவிடும் வேறொரு முறைமையொன்றை தொடர்புபடுத்துவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. |

(இ) நிதி ஏற்பாடு வழங்கப்படாமை

| | | |
|---|---|---|
| சபையினால் பௌதீக திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூலதனச் செலவினமாக ரூபா 13.07 மில்லியன் தொகை பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட போதிலும், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 26 செயற்திட்டங்களுக்காக ரூபா 25.89 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 12.82 மில்லியனுக்காக வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடு வழங்கப்படவில்லை. | சாத்தியமான முறையில் பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் பாதீடு தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தாமை.

| | | |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களின் கால அட்டவணையின் பிரகாரம் அமுல்படுத்தவேண்டியிருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 22.79 மில்லியன் கிரயமான 20 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சாத்தியமான முறையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் வேண்டும். | |

(உ) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பான செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 15.69 மில்லியன் கிரயமான 35 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் தயாரித்தல் மற்றும் அந்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் புறம்பான செயற்திட்டங்களை செய்வதாயின் அதற்குப் பதிலாக திருத்தப்பட்ட திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையால் எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் புறம்பான செயற்திட்டங்களை அமுல்படுத்தாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 32,018,486 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கழிவுகளுககாக கழிவுப் பொருள் வரி விதித்தமையால் கிடைத்த வருமானம் ரூபா 641,500 ஆகும். எனினும், கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்படவில்லை. | உக்கும் கழிவுகளுக்காக கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். | கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. |

(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அந்த சுற்றறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள புதிய கொள்கை உபாய வழிகள் அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை. | உரிய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது செயற்பாடுகள் சரியாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| செயலாளர், கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டதுடன் 03 வருமான பரிசோதகர் பதவிகள், மற்றும் 02 வேலை பரிசோதகர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. | பதவியணியின் வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த, இடமாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 83 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாத ரூபா 185,329 நிலுவை கடன் மீதி காணப்பட்டது. | விரைவாக நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதிக் கடன் மீதி எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் முன்னாள் உத்தியோகத்தரால் பெறப்பட்டு மீளக் கையளிக்கப்படாத ரூபா 26,400 பெறுமதியான 16 கொடித் தூண்கள் மற்றும் 24 LED மின்குமிழ்கள் என்பவற்றுக்கான நட்டம் அறவிடப்படவில்லை. | நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நட்டத்தை அறவிடுவதற்குரிய ஒழுக்காற்று பரிசோதனையொன்று நடாத்துமாறு களுத்துறை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பெறுகை ஆரம்பிக்கப்படுகின்ற மற்றும் முடிவடைகின்ற திகதிகள் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 25.89 மில்லியன் கிரயமான 26 செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து சரியான பிரகாரம் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையின் மூலம் தார் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிக்காக வீதியின் தன்மையினை இனங்கண்டு அதன் பிரகாரம் மட்டத்தை தீர்மானித்து வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் ABC நிரப்ப வேண்டிய இடங்கள் இனங்காணப்படாமல் ABC கியூப் 53.42 கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 129,290 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தார் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட செயற் திட்டத்திற்காக வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | தார் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட செயற் திட்டத்திற்காக மொத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வீதி அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ABC இன் கலவை விகிதம் பரிசோதனை அறிக்கைகளில் இருந்து உறுதிப்படுத்தப்படாமல் வீதிக் | ABC இன் கலவை விகிதம் பரிசோதனை அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட | சபைக்கு வழங்கப்படுகின்ற ABC இற்காக தற்போது கலவை விகித பரிசோதனை அறிக்கை மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | கட்டண பட்டோலையில் அதிகரித்த விலை வீதத்தைப் பயன்படுத்தி 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 778,172 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். | பெற்று பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது. |
| (இ) | நேர் ஊழிய முறையின் மூலம் தார் இட்டு வீதி அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டின் பிரகாரம் மூலப்பொருட்களின் தேவை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், விநியோகக் கட்டளையின் பிரகாரம் 03 செயற்திட்டங்களுக்காக மூலப்பொருள் தேவையை விட ரூபா 189,025 தொகை அதிகமாகவும், ரூபா 129,369 தொகை குறைவாகவும் விநியோகிக்கப்பட்டிருந்தது. | செயற் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு செய்யப்பட்ட வீதியின் அகலத்தை அதிகரித்தமையினால் மூலப்பொருள் இவ்வாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், தார் விநியோகித்தல் தேவையின் அளவின் பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தது. |
| (ஈ) | ஒப்பந்காரரினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகளின் தரம் உறுதிப்படுப்பட வேண்டிய போதிலும் காபட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 02 வீதிகளுக்கு ABC தடிப்பு மற்றும் காபட்களின் கலவை விகிதம் பரிசோதனை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தாமல் ரூபா 13,693,365 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், காபட் இடப்பட்ட ஒரு வீதியின் மதிப்பீட்டின் பிரகாரம் காணப்பட வேண்டிய 40 மி.மீ தடிப்பத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | ABC மற்றும் காபட் தடிப்பத்தின் கலவை விகிதம் பரிசோதனை அறிக்கையில் உறுதிப் படுத்துவதன் மூலம் வீதியின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டங்களுக்காக ABC பரப்புவதற்குரிய மற்றும் காபட் தடிப்பு பரிசோதனை அறிக்கை மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. எதிர்காலத்தில் ABC தடிப்பம் மற்றும் கலவை விகிதம் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |
| (உ) | பெலஸ் வீதி காபட் இடும் பௌதீக பரிசோதனையின் போது 1584 சதுர மீற்றருக்காக 63.36 கனமீற்றர் அளவையின் பிரகாரம் காபட் பயன்படுத்தப்படடிருந்த போதிலும், 1,700 சதுர மீற்றருக்காக 68 கன மீற்றருக்கு செலுத்தப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 116 | 116 சதுர மீற்றருக்காக பயன்படுத்தப்பட்ட Cut back அளவு மற்றும் அதன் தடிப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக அனுபவமுடைய 03 பொறியியலாளர்களினால் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| | சதுர மீற்றருக்காக Cut back பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த அளவு மற்றும் அதன் தடிப்பு உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 115,336 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | சமட் மாவத்தையின் வீதியில் காணப்பட வேண்டிய காபட் தடிப்பு மட்டத்தை விட குறைவாக காணப்பட்ட 65 மீற்றர் அளவிற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 66,505 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | காபட் தடிப்பை பரீட்சித்து மேலதிக செலுத்தல்கள் அறவிடப்பட வேண்டும். | 03 பொறியியலாளர்களினால் உறுதிப்படுத்தப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக அவர்களினால் பொறுப்பு கூறப்படும். |
| (எ) | நிர்மாண ஒப்பந்த அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியின் இரு பக்கமும் எல்லை அடையாளப்படுத்த வேண்டியிருந்த போதிலும் பீ.பி.ஜயா மாவத்தையில் 16.76 சதுர மீற்றருக்காக அவ்வாறு எல்லை அடையாளப்படுத்தப்படாமல் ரூபா 34,777 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வீதி எல்லை அடையாளப்படுத்தப்பட்டு செலுத்தப்பட வேண்டும். | தற்போது எல்லை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. |